செய்தி வெளியீடு எண். 37 நாள்: 19.01.2018

## துப்புரவு பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் உறுப்பினர் திரு.ஜெகதீஷ் ஹேர்மனி அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் துப்புரவு பணியாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் பொருளாதாரம் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் துப்புரவு பணியாளர்களுக்கான தேசிய ஆணையத்தின் உறுப்பினர் திரு.ஜெகதீஷ் ஹேர்மனி அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் துப்புரவு பணியாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் பொருளாதாரம் குறித்த ஆய்வு கூட்டம் இன்று (19.01.2018) நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டத்தில் தேசிய துப்புரவு மறுவாழ்வு ஆணையத்தின் உறுப்பினர் அவர்கள் துப்புரவு பணியாளர்களின் சமூக பொருளாதாரம், வாழ்க்கைத்தரம், வேலை, பணி மற்றும் கல்வியின் நிலை, அவர்களைச் சார்ந்தோர்களின் நிலை ஆகியவைகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்கிறார். 2013-ம் ஆண்டு மனித கழிவுகளை கைகளால் அகற்றும் துப்புரவு தொழிலாளர் முறையை ஒழிக்க இந்திய அரசு சட்டம் இயற்றியது. இந்த சட்டத்தின் மூலம் துப்புரவு பணி மேற்கொள்வதால் பணியாளர்களின் இறப்பு சதவிகிதத்தை குறைத்து, நாடு முழுவதும் இச்சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை உறுதி செய்யும் விதமாக இந்திய அரசு ஆணையத்தை அமைத்து ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. துப்புரவு பணியாளர்களாக உள்ளவர்களுக்கு தனி குடியிருப்புகள், அவர்களைச் சார்ந்தவர்களுக்கு நல்ல கல்வி, மத்திய மற்றும் மாநில அரசு வகுத்துள்ள குறைந்தபட்ச தினக்கூலி மற்றும் அவர்களின் சுகாதார வாழ்க்கை முறை ஆகிய நான்கு முக்கிய குறிக்கோள்களைக் கொண்டு இவ்வாணையம் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மாவட்ட நிர்வாகத்தின் மூலமாக மனித கழிவுகளை பாதுகாப்பு இல்லாமல் அகற்றும் பணியாளர்கள் உள்ளார்களா என மாவட்ட முழுவதும் ஆய்வு செய்யப்பட்டு அதன் அறிக்கையின் அடிப்படையில் அடுத்த கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறு அடையாளம் தெரிந்த நபர்களுக்கு முதற் கட்டமாக இந்திய அரசின் மூலமாக ரூ. 40 ஆயிரம் முதல் தவணையாகவும், பின்னர் ரூ. 5 இலட்சம் நிதியுதவியும் வழங்கப்படும். பின்னர், அவர்களுக்கு சுய தொழில் மேற்கொள்வதற்கு ரூ. 25 இலட்சம் வரை கடன் உதவிகள் வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கூடுதல் கண்காணிப்பாளர் திரு.கே.ஸ்டாலின். மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் திருமதி.கலைச்செல்வி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு.செந்தில்குமார், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் துப்புரவு பணியாளர் அமைப்புகளின் பிரதிநிதிகள், நகராட்சி (ம) பேரூராட்சிகளைச் சேர்ந்த துப்புரவு பணியாளர்கள் உள்ளனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**